செய்தி வெளியீடு எண்.556 நாள்.11.7.08

## மறைந்த 2 சென்னை மாநகராட்சி மன்ற உறுப்பினர்களுக்கு நிதி உதவிகள் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் வழங்கினார்

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்று (11.7.08) தலைமைச் செயலகத்தில் 31.3.2008 அன்று இயற்கை எய்திய சென்னை மாநகராட்சி மன்ற உறுப்பினர் திரு.இரா. ஸ்ரீதர், (வார்டு–18) அவர்களின் துணைவியார் திருமதி.எஸ்.மாலதி அவர்களிடம் சென்னை மாநகராட்சி சார்பில் குடும்பப் பாதுகாப்பு நிதி ரூபாய் ஒரு இலட்சமும், சென்னை மாநகராட்சி மன்ற உறுப்பினர்களின் ஒரு நாள் அமர்வுப்படி ரூபாய் ஒரு இலட்சத்து 21 ஆயிரத்து 600 என மொத்தம் ரூபாய் 2 இலட்சத்து 21 ஆயிரத்து 600க்கான காசோலையினை வழங்கினார். அதே போன்று 18.5.2008 அன்று இயற்கை எய்திய சென்னை மாநகராட்சி மன்ற உறுப்பினர் திரு.சுப்பிரமணி என்கிற மாரிமுத்து (வார்டு–44) அவர்களின் துணைவியார் திருமதி.எஸ்.தெய்வானை அவர்களிடம் சென்னை மாநகராட்சி குடும்பப் பாதுகாப்பு நிதி ரூபாய் ஒரு இலட்சமும், சென்னை மாநகராட்சி மன்ற உறுப்பினர்களின் ஒரு நாள் அமர்வுப்படி ரூபாய் ஒரு இலட்சத்து 20 ஆயிரத்து 800 என மொத்தம் ரூபாய் 2 இலட்சத்து 20 ஆயிரத்து 800க்கான காசோலையினை வழங்கினார்.

இந்நிகழ்ச்சிகளில் சென்னை மாநகர மேயர் திரு.மா.சுப்பிரமணியன், மாநகராட்சி ஆணையாளர் திரு.ராஜேஷ் லக்கானி, இ.ஆ.ப., துணை மேயர் திருமதி.ஆர்.சத்தியபாமா, மன்ற ஆளுங்கட்சித்தலைவர் திரு.ந.இராமலிங்கம், மன்ற எதிர்க்கட்சித்தலைவர் திரு.சைதை ப.ரவி, நியமனக்குழு உறுப்பினர்கள் திரு.த.வி.முத்துக்கிருஷ்ணன், திரு.மு.வேலாயுதம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

*****

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.